உ

ஓம் குஹாய நம :

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5.

விக்கிரம ஸூ தை மீ 1வ
ஜனவரி-1941

இதழ் 10. No 10.

திருப்புகழ்

திருவேரகம் (சுவாமிமலை)

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க அறியாத

சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ

கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே

கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே

தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு

தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா

அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா

அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே,

பதவுரை:

கயிலைமலை நாதர் பெற்ற - வெள்ளிமலை மேவும் சிவபெருமான் பெற்றருளிய, குமா - குமாரக் கடவுளே! ஈசா - எப்பொருட்கு மிறைவரே! கடகபுய மீதில் - கடகங்களை யணிந்துள்ள புயங்களில், ரத்னமணி அணி - இரத்தினங்களைப் பதிய வைத்துள்ள அணிகலன்களையும், பொன்மாலை - பொன் மாலைகளையும், செச்சை - வெட்சிப் பூவையும், மணம் கமழும் - வாசனை வீசும், ஆர் - அருமையான, கடப்பம் - கடப்ப மலர்மாலையையும், அணிவோனே - தரித்துக் கொண்டிருப்பவரே! நெய்த்த - நெய்பூசப் பெற்றதும், வடி - கூர்மை யுடையதுமாகிய, வேலா - வேற்படையை யுடையவரே! அருண தள பத்மம் - சிவந்த இதழ்களை யுடைய தாமரைக்கு நிகரான, பாதம் அது - தேவரீருடைய திருவடிகளை, நிதமும் (ஏ—அசை) துதிக்க - நாள்தோறும் நாவாரத் தோத்திரம் புரிய, அரிய தமிழ்தான் அளித்த - அருமையான செந்தமிழ்ப் புலமையைக் கொடுத்தருளிய, மயில் வீரா - மயில் வாகனத்தை யுடைய வீரரே! அதிசயம் அநேகம் உற்ற - பல அதிசயங்கள் நிறைந்த, பழநிமலை மீது உதித்த - பழநி என்னும் திருமலைமேல் தோன்றிக் காட்சி வழங்கும், அழக - பேரழகுடையவரே! திரு ஏரகத்தின் - திரு ஏரகம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள, முருகோனே - முருகப் பெருமானே! சரண கமல ஆலயத்தை - தாமரைக்கு நிகரானதும் ஆன்மாக்கள் ஒடுங்கு மிடமுமாகிய தேவரீருடைய திருவடியை, அரைநிமிஷ நேரமட்டில், அரை நிமிஷநேரமேனும், தவமுறை - தவமுறைப்படி, தியானம் வைக்க அறியாத - ஒருமுகப்பட்டு ஐம்புலன்களையும் அடக்கி சிவயோகத்தில் கருத்தை வைத்து நினைக்கும் தன்மையை உணராத, சட - அறிவில்லாதவனும், கசட - மாசுடையவனும், மூட - மயக்கத்தை யுடையவனும், மட்டி - தெளிவில்லாதவனும், பவ வினையிலே செனித்த - பிறப்பு இறப்புக்குரிய தீவினை வசத்தால் பிறந்தவனும், தமியன் - திக்கற்றவனுமாகிய அடியேன், மிடியால் மயக்கம் உறவேனோ - அருட் செல்வமற்று வறுமையால் மயக்கத்தை யடையலாமோ? கருணை புரியாது இருப்பது - கருணைவள்ளலாகிய தேவரீர் அல்லல்படும் அடியேன் மீது கருணை செய்யாமல் இருப்பதற்குக் காரணம், என குறை - அடியேன் செய்த குற்றம் யாது? இவேளை செப்பு - இந்த வேளையில் திருவாய் மலர்ந்தருள்வீர், ஐயா - என்னையனே! இது தருணம் - திருவருள் பெறுவதற்கு இது நல்ல தருணமாகும், மிகுத்த கனம் அது உறு - மிகுந்த பெருமையை யுடைய, நீள்சவுக்யம் - என்றும் இடையறாத பரசுகத்தையும், சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு - கல்விச் செல்வம்செவிச்செல்வம்சோற்செல்வம்அருட்செல்வம்முதலியஎல்லாசெல்வங் களுடனும் கூடிய பெரிய வாழ்வையும், தகைமை - தகுதியையும், சிவஞானம் - பதியறிவையும், முத்தி பரகதியும்- பிறவாப் பெற்றியாகிய மோட்சத்தையும், நீ கொடுத்து - தேவரீர் தந்தருளி, உதவிபுரிய வேணும் - தயவு செய்து காத்தருள்வீர்.

பொழிப்புரை:

கைலாயமலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் பெற்றருளிய குமாரக் கடவுளே! எப்பொருட்கும் இறைவனே! வஜ்ர கடகங்களை யணிந்துள்ள புயங்களின்மீது, இரத்தினங்களிழைத்த திருவாபரணங்களையும், பொன்மாலைகளையும், வெட்சி மலர்மாலையையும் தரித்துக்கொண்டிருப்பவரே! நெய்பூசப் பெற்றதும் கூர்மையுடையதுமாகிய வேற்படையை யுடையவரே! சிவந்த இதழ்களையுடைய தாமரை மலர்போன்ற தேவரீருடைய திருவடிகளை நாள்தோறும் நாவாரத் துதிக்க அருமையான செந்தமிழ்ப் புலமையைத் தந்தருளிய மயில்வாகனத்தையுடையவரே! பற்பல அதிசயங்களையுடைய பழநிமலைமேல் அருட்கோலங் கொண்டு விளங்கும் கட்டழகுடையவரே! திருவேரகம் என்னும் சுவாமி மலையில் எழுந்தருளியுள்ள முருகக்கடவுளே! தாமரைக்கு நிகரானதும் ஆன்மாக்கள் ஒடுங்குமிடமுமாகிய தேவரீருடைய திருவடியை, அரை நிமிஷநேரமாகிலும் ஒருமுகப்பட்டு புலன்களை யடக்கி தவமுறைப்படி தியானஞ் செய்யுந் தன்மை யுணராதவனும், அறிவில்லாதவனும், குற்றமுடையவனும், மூடனும், மட்டியும்,பிறவிக்குக்காரணமாகிய தீவினையால்பிறந்துழலுபவனுமாகிய அடியேன் அருட்செல்வமற்ற வறுமையால் மயக்கத்தையடைந்து துன்புறுவது முறையோ? கருணைக் கடலாகிய தேவரீர் அடியேன்மீது கருணைசெய்யாம லிருப்பதற்குக் காரணம் என்மீதுள்ள குற்றம் யாது? இந்த வேளையில் திருவாய் மலர்ந்தருளுவீர்; ஐயா! திருவருள் புரிதற்கு இது நல்ல தருணம்; மிகுந்த பெருமையுடைய - இறுதியற்ற பேரின்பத்தையும், எல்லா வகையான செல்வங்களுடன் கூடிய பெருவாழ்வையும், தகுதியையும், பதியறிவையும், பிறவாப் பெற்றியாகிய மோட்ச நலத்தையும் தேவரீர் தந்தருளி உதவிபுரிந்தருள்வீர்,

விரிவுரை:

சரண கமலா லயம்:—

ஆலயம் - தங்குமிடம்; உயிர்கள் பிறவித் துன்பத்தாலுண்டாகிய இளைப்பு நீங்க அடையும் இடம் முருகவேளுடைய திரு

வடியேயாம். "காவிக் கமலக் கழலுடன் சேர்த்தென்னைக் காத்தருள்வாய்" "எனக்கிடம் உனது பதச் சரண்" "திருவடியிலணுக வரம் அருள்வாயே" என்ற சுவாமிகள் திருவாக்குகளை உய்த்துணர்க. "இறைவன் திருவடி நீழலெய்தினர்" என்று உலகங்கூறும் உபசார வழக்கும் இது பற்றியேயாம்.

அத்தகைய திருவடியை அரைக்கணமேனும் நினைத்து தவமுறைப்படி தியானஞ் செய்யவேண்டும்.

"திணைப் போதளவும் ஓங்காரத்துள் ளொளிக்குள்ளே முருகன்
உருவங்கண்டு தூங்கார்"
—அலங்காரம்

தவமுறை தியானம்:—

தவமுறையாவது, உற்ற நோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாது, பொறிபுலனடக்கி, மனத்தை ஒரு முகப்படுத்தி, சித்திர தீபம்போல் அசைவற்று நின்று, உயிராவணமிருந்து, உள்ளக் கிழியில் அவன் உருவெழுதி உற்று நோக்கி இருக்கும் நிலையாம்.

"மாருத்தியானமுற் றுணர்ந்த மேலிட்டு மார்பிற் கண்ணி
ராருப்ப பெறுகக் கிடப்ப தென்றோ கயிலா யத்தனே"
—பட்டினத்தடிகள்

மிடியால் மயக்கமுறு வேனோ:---

மிடி - வறுமை. இங்கே அருட்செல்வ மின்மையைக் குறிக்கின்றது. அருட் செல்வமுடையாரே செல்வராம். ஏனைய பொருட் செல்வ முதலியன இருக்கினும் வறுமையாளரேயாம்.

"அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம்
பூரியார் கண்ணு முள,
—திருக்குறள்

"திருவருளின்மையால் உண்மை நெறியிதென் றுணராது மயக்க முறுகின்றேன்" என்றார்.

கருணை புரியா திருப்பதேன குறை:---

முருகவேள் கருணை வடிவினர்; கருணாகரர்; கருணைக்கடல்; கருணை மேரு; கருணை மேகம்; அவருடைய ஆறு திருமுகங்களி

னும் குற்றால நீர்வீழ்ச்சியினும் பல்லாயிர மடங்கு மிகுதியாக கருணை பொழிந்து கொண்டிருக்கின்றது.

"கருணைபொழி கமலமுக மாறும்"
"உனதுமுக கருணைமல ரோராறும்"
"மறுவறு கடலென மருவுப னிருவிழி
வழிந்த அருளே பொழிந்த தொருபால்"
"கருணை மேருவே ஈறில் கருணை வாரியே தூய
கருணை மேகமே தேவர் பெருமாளே"

"முகம் பொழி கருணை போற்றி" என்ற அருமைத் திருவாக்குகளை யுன்னுக. "இத்தகைய கருணைக் கடவுளாக இருந்தும் கருணை புரியாமல் இருப்பதற்கு யான் செய்த குற்றம் யாது? தன் குற்றம் தனக்குத் தெரியாதாதலினால் தேவரீரே இந்த வேளையில் "நீ இன்ன குற்றத்தையுடையவன்" என்று சொல்லியருளினால், ஆண்டவனே? அக்குற்றத்தினின்றும் விடுபட்டு அடியேன் உய்வேன்" என்று சுவாமிகளை வேண்டுகின்ற திறம் எத்துணை அருமைப் பாட்டினை யுடையதாக இருக்கின்றது என்பதை நினைக்க நெஞ்சம் நெகிழ்கின்றது. உள்ளுந் தோறும் உள்ளம் உருகுகின்றது.

கயிலை மலைநாதர் பெற்ற குமரேசா:---

கயிலாயபதியாகிய கண்ணுதற் கடவுள் குற்றமே செயினுங் குணங்களாகக் கொள்ளுமியல்பினர். குருத்துரோகியாகிய சந்திரனையும், கயிலாய மலையைத் தூக்கிய இராவணனையும், வில்வக்கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையையும் ஆட்கொண்ட அருட்கடல்; கொல்லவந்த பாம்பை அணிகலனாகக்கொண்டவர்; பன்றிக்குட்டிகட்கும் பால்கொடுத்த பரம கருணைவள்ளல்,

மற்றுநான் பெற்றதார் பெறவல்லார் வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங் கொள்கையால் மிகைபல
செய்தேன்
செற்று மீதோடுந் திரிபுர மெரித்த திருமுல்லை வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே.
—சுந்தரர்

வெறுப்பனவே செய்யுமென் சிறுமையைநின் பெருமையினால்
பொறுப்பவனே அராப்பூண்பவனே பொங்கு கங்கைசடை

செறப்பவனே நின்றிருவரு ளாலென் பிறவியைவேர்
அறப்பவனே யுடையா யடியேனுன் அடைக்கலமே.

—மணிவாசகர்

இத்தகைய குற்றத்தைக் குணமாகக் கொள்ளும் குன்றவில்லியாரின்ற புதல்வ ராதலால் தேவரீரும் என் குற்றத்தைப் பொறுத்தருளல் வேண்டும் என்பது குறிப்பு.

கடகபுயமீதில்..........அணிவோனே:---

"பொன்மலையைக் கையிலேந்தி வெள்ளிமலையில் வாழும் விடையவன் புதல்வராதலால் உம்முடைய பெருமிதத்திற்குத் தக்கவாறு நவரத்னபாணங்களும் பொற்கலன்களும் மலர் மாலைகளும் அணிந்து கொண்டிருக்கின்றீர், அடியேன் மிடியால் துன்புறுகின்றேன். ஆதலால், அடியேனை யாள்வது உமக்கே கடன்" என்று விளக்குகின்றனர்.

தருண மிதையா:---

தருணம் இது ஐயா என்று பிரித்துக்கொள்க. "திருவருள் பெறுதற்கு இது நல்ல தருணம்" என்கின்றார். மனிதப் பிறப்பாதலினாலும், இறைவனை நினைக்கும் பேறுடைமையினாலும் நல்ல தருணமாகின்றது.

சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வு:---

மக்கட் செல்வம், மனைச் செல்வம், பொருட் செல்வம், அருட் செல்வம், சொற் செல்வம், செவிச் செல்வம், கல்விச் செல்வம் முதலியன. இவைகள் இம்மைப் பயன்கள்.

தகைமை சிவஞான முத்தி பரகதி:---

இவைகள் மறுமைப் பயன்.

அதிசய மநேகமுற்ற பழநிமலை:---

பழநிமலையில் பற்பல அதிசயங்கள் காணப்படுகின்றன; அங்கே ஆண்டவருக்கு வல்லிதேவ சேனையில்லை; ஆயினும் பள்ளியரையுண்டு. கண்ணிலார்க்குக் கண் தருவதும், பிணியுற்றார் பிணிதீர்வதும் அங்கே கண் கூடு. பழ நிமலை எனப்பிரித்து,

பழையவளாகிய அம்பிகையினிடம் தோன்றி விளங்கும் அழகன் எனவும் பொருள் கொள்ளலாம்.

அரிய தமிழ் தானளித்த மயில்வீரா:---

உலகில் பேசப்படும் மொழிகளுக்குள் தலைசிறந்தது தமிழ் மொழியேயாம். இறைவனருளை எளிதில் பெறுதற்கு ஏற்ற மொழியுந் தீந்தமிழேயாம். இறைவன் சங்கப் புலவரில் தானும் ஒருவனாயிருந்து தமிழ் ஆராய்ந்தமையாலும், பெற்றான் சாம்பான் பொருட்டு உமாபதி சிவத்தினிடம் சீட்டு எழுதியனுப்பியது தமிழாலேயாதலானும், சுந்தரருக்கும் சேக்கிழாருக்கும் அருணகிரியாருக்கும் அடியெடுத்துக் கொடுத்தது தமிழிலேயே என்பதனாலும் இதன் பெருமை நன்கு விளங்குகின்றது. முதலை வாய்ப்பட்ட மகனுக்கு உயிர் கொடுத்தது தமிழ்; கற்புணையை நற்புணையாக்கியது தமிழ்; எலும்பைப் பெண்ணாக்கியது தமிழ்; இறைவனை இரவில் இருமுறை நடந்து தூது போகச் செய்தது தமிழ்; குதிரைச் சேவகனாக வரச் செய்தது தமிழ்; கற்றூணில் காட்சிதரச் செய்தது தமிழ்; பற்பல அற்புதங்களைச் செய்ய வைத்தது தமிழ்; இயற்கையான மொழி தமிழ்; பேசுந்தொறும் பேரின்பத்தை வழங்குவது தமிழ். ஆதலால் நம் அருணகிரியார் "அரிய தமிழ்" என்று வியக்கின்றார். மயில்வீரா என்றதனால் தமிழுக்கும் மயிலுக்கும் சம்பந்தம் உண்டு. தமிழ் ஓங்கார வடிவத்தை காட்டியாடுவது மயில். ஏனையமொழிகளின் ஓங்காரத்தை அது காட்டுவதில்லை. ஆதலால் மயில்வீரா என்று விளித்தனர்.

கருத்துரை:

சிவ குமாரரே! இரத்தினபுரணரே! வேலவரே! தமிழளித்த மயில் வீரரே! பழநியிலும் ஏரகத்திலும் விளங்குபவரே! நின் திருவடித் தியானமின்றி மிடியால் மயங்கி அடியேன் அழியா வண்ணம் இகபர சௌபாக்கியத்தைத் தந்தருள்வீர்.

குறிப்பு:---இத்திருப்புகழ் அன்பர்கள் நாள்தோறும் அவசியம் பாராயணஞ் செய்யவேண்டிய அருமைப் பாடல். ஊனும் உடலும் உள்ளமும் உயிரும் உணர்வும் உருக ஓதி கந்தவேளருளைப் பெறுவதற்கு இத்திருப்புகழ் மிகச் சிறந்ததாம்.

உ

ஓம் குஹாய நம :

கந்தரலங்காரம்

(203-வது பக்கத் தொடர்ச்சி)

(23) தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேறபடை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

பதவுரை:

தெய்வ திருமலை - தெய்விகம் பொருந்தியதும் அழகிய மலையுமாகிய, செங்கோட்டில் - திருச்செங்கோட்டில், வாழும் - உறைகின்ற, செழும் சுடரே - செழுமையைத் தரும் ஜோதியே! வை வைத்த - கூர்மை பொருந்திய, வேல் படை - வேலை ஆயுதமாகக் கொண்ட, வானவனே - தெய்வமே! நான் உனை மறவேன் - அடியேன் தேவரீரை ஒருபோதும் மறக்க மாட்டேன், ஐவர்க்கு இடம்பெற - ஐம்புலன்களுக்கு இடமுண்டாகும்படி, கால் இரண்டு ஓட்டி - இரண்டு கால்களை நிறுத்தி, அதில் - அதனிடத்து, இரண்டு கை வைத்த - இரண்டு கைகளை அமைத்து வைத்துள்ள, வீடு - வீடுபோன்ற இந்த உடம்பு, குலையு முன்னே—அழிவதற்கு முன்பாகவே, வந்து—தேவரீர் அடியேனுக்கு முன் தோன்றி வந்து, காத்தருள்—காப்பாற்றி யருள்வீர்.

விரிவுரை:

தெய்வத் திருமலைச் செங்கோடு:---

திருசெங்கோடு என்னும் அழகிய மலை முருகப் பெருமானுடைய திருத்தலம்; இது சேலம் ஜில்லாவிலுள்ளது. இங்கு சிவபெருமான் அர்த்த நாரீஸ்வர வடிவமாக விளங்குகின்றார். இத்தலத்தில் முருகப் பெருமான் கண்ணுக்குங் கருத்துக்கும் அடங்காத கவினுடன் விளங்குகின்றார்.

''சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலாயிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே''

அருணகிரி சுவாமிகளுக்குச் செங்கோட்டு ஆண்டவனிடம் அளவிறந்த காதல் உண்டு என்பதற்கு அவர் அடிக்கடி செங்கோடனை நினைப்பதே சான்று.

(1) ''கரிக்கோட்டுமுத்தைக்
கொழித் தோடு காவிரிச் செங்கோட னென்கிலை''

(2) ''பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே''

(3) ''சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனை''

(4) ''கன்னி பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே''

(5) சேலிற் றிகழ்வயல் செங்கோடை வெற்பன்.

என்ற கந்தாலங்கார வாக்குகளையும், "நாகாசல வேலவ" என்ற கந்தரநுபூதி வாக்கினையும் நோக்குக.

சேழுஞ்சுடரே:---

ஏனைய ஜோதி வெப்பத்தை நல்கும்; ஆறுமுகமாகிய அருட் பெருஞ் ஜோதி தட்பத்தை நல்கும்; "தழைந்த சிவசுடர்" என்ற திருவாக்கை இதனெடு ஒத்து உன்னுக.

வை வைத்த வேற்படை:---

வை-கூர்மை; வெல் என்ற வினைபடியாகப் பிறந்தது வேல் என்ற சொல்; படு என்ற பகுதியிலிருந்து படை யென்று வந்தது. பகைவரைப் படுப்பது. வேல் என்பது ஞானம், ஞானம் கூர்மை யாக வுள்ளது. ஆதலால் வைவைத்த வேற்படை யென்றார்.

''கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே''

—மணிவாசகர்.

மறவேனுனைநான் :---

முருகவேள் திருவருள் முழுவதும் பெற்ற அருணை யடிகள் தன்னை யாண்ட தலைவனைக் கணமேனும் மறப்பரோ?

''வயலி நகரியி லருள்பெற மயில்மிசை
உதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலு நனவிலு மறவேனே''

"கருவண யடியரொ டருணையி லொருவிசை
சுருதி புடைதர வருமிரு பரிபுர
சமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே"

"வாழினும் வறுமை கூரினு முனது
வார்கழ லதனை மறவேனே"

ஐவர்:---

மெய் வாய் கண் நாசி செவி என்னும் ஐம்புலன்கள். புலன்கள் ஐந்தும் உயிரில்லாத அஃறிணைப் பொருள்களாயினும் உயிர் அவைகளைத் தன்னினின்றும் வேருகப் பிரித்து உயிரில் பொருள் என்று அறியாது உயிர்ப்பொருள்கள் போலக் கருதி அவைகளுக்குள் அடங்கி ஒழுகலால் உயர்திணையாகக் கூறி வைத்தார்.

"புள்ளுவர் ஐவர் கள்வர் புனத்திடை புகுந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர் தூநெறி விளைய வொட்டார்"
"அழிவுடைத் தாய வாழ்க்கை ஐவரா லலைக்கப் பட்டுக்
கழியிடைத் தோணிபோன்றேன் கடவூர் வீரட்ட னுரே"
—அப்பர்.

கைவைத்தவீடு:---

உடம்பை வீடாக உருவகம் புரிகின்றனர். காலிரண்டோட்டி என்றதனால் கால்கள் தூண்களாகும். கைகள் கொடுங்கையாகும்.

கால்கொடுத் திருகை யேற்றிக் கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீராற் சுவரெடுத் திரண்டுவாசல்
ஏல்வுடைத் தாவமைத்தங் கேழுசா லேகம்பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காடனுரே
—அப்பர்.

இத்தகைய நிலையற்ற வுடம்பு அழிவதற்கு முன் காத்தருளுமாறு கந்தவேளை சுவாமிகள் வேண்டுகின்றார்.

கருத்துரை:

திருச்செங்கோடரே! வேலவரே! உடல் அழிவதற்கு முன் அடியேனைக் காத்தருள்வீர்.

குறிப்பு:--- இப்பாடல் நாள்தோறும் பாராயணஞ் செய்தற்குரியது. அன்பர் அநுதினமும் அவசியம் இதனை ஓதி யுய்வார்களாக.

உ

ஓம் குஹாய நம:

சிவாநந்தலஹரீ

(204-வது பக்கத் தொடர்ச்சி)

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

3 4
அரஹஸி ரஹஸி ஸ்வதந்த்ர புத்யா
4
பரிவஸுதம் ஸுலப: ப்ரஸந்ந மூர்த்தி:!
3 2 3 4
அகணித பலதாயக: ப்ரபுர்மே
3 4 3 2
ஜகததிகோ ஹ்ருதி ராஜ ஸேகரோஸ்தி!!

பதவுரை:

ப்ரபு:	— சமர்த்தராயும்,
ப்ரஸந்நமூர்த்தி:	— கருணையால் வெளிப்படுகின்ற திருமேனியை யுடையவராயும்,
அகணித பலதாயக	— கணக்கற்ற பயன்களைத் தருகின்றவராயும்,
ஜகததிக:	— உலகங்களைக் காட்டிலு மேலானவராயு மிருக்கின்ற,
ராஜஸேகர:	— சந்திரசேகரர் சார்வ பௌமரான ஓரரசர்,
மே	— அடியேனுடைய
ஹ்ருதி	— மனத்தில்
அஸ்தி	— இருக்கின்றார். (ஆதலால்)
அரஹஸி	— வெளியிலும்
ரஹஸி	— மறைவிலும்
ஸ்வதந்த்ர புத்யா	— தனக்கு உரிமையான அறிவால்
பரிவஸுதம்	— அடியேன் அருகில் இருப்பதற்கு (ஏவல் செய்ய)
ஸுலப:	— எளிதானவன்.

போழிப்புரை:

வரம்பிலா வன்மையரும், கருணையால் வெளிப்படுகின்ற திருவுருவினரும், அளவற்ற பயன்களை யருள்பவரும், சகலலோக ஏகநாயகரும், பிறைசூடியுமான தனித்தலைவர் அடியேன் மனத்தில் இருக்கின்றார். ஆகலால், உள்ளிடத்திலும் வெளியிடத்திலும் எனது அறிவினால் அவருக்கு ஏவல் செய்வதற்கு உரியவனாக இருக்கின்றேன்.

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(208-வது பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு வீரவாகு தேவரும் ஏனைய பூதர்களும் நகரத்தை யழிப்பதனைத் தூதர் சென்று சூரபன்மனுக்குச் சொல்லினர். சூரபன்மன் மிகவுஞ் சினந்து, "தேவரைக் கொணர்திர்" என்னலும், ஆங்கு ஒரு புறத்தில் பாம்பு போலப் புழுங்கிக் கொண்டிருந்தவனும், ஆயிரம் வேதங்களையும் அறிந்தவனும், அறத்தையும் நீதியையும் உணர்ந்தவனும், வஞ்சனைகளையும் மாயங்களையும் கற்றவனும், மூன்று தலைகளை யுடையவனும், சூரபன்மனுடைய புதல்வனுமாகிய இரணியன் எழுந்து, பிதாவினுடைய திருவடியைத் தொழுது, "தந்தையே! எனது பொருளடங்கிய சொற்களைச் சிறிது கேளும்; நாம் தேவர்களைச் சிறை செய்தது பாவம்; 1008 அண்டங்களை யாளும் ஆட்சியும் வாழும் பெற்றது சிவமூர்த்தியினிடம் என்பதை எண்ணுதி. பிரமாதி தேவரை வெல்லும் ஆற்றலும் ஏற்றமுங் கொடுத்த அப்பரமேசுவரன் நம்பாலுள்ள தீமை காரணமாக அவ் வரங்களை மாற்ற நினைப்பாராயின், அவரை நீ வணங்கி யுய்வதன்றி, அவரோடு போர் புரிவது தகுமோ? முறையாகுமா? நன்றி கொன்றவனைக் கொல்ல வேறு இயமனும் வேண்டுமோ?

ஒன்றொரு பயன்றனை யுதவினோர் மனங்
கன்றிட ஒருவினைக் கருதிச் செய்வரேல்
புன்றொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடு மல்லது கூற்றும் வேண்டுமோ.

சிவபெருமானை எதிர்த்து இதுவரை பிழைத்தவருளரோ? பார்வையால் மன்மதனையும், சிரிப்பால் முப்புரத்தையும், கால்விரலால் சலந்தரனையும் அவர் அழித்ததனை நீர் கேட்டிலை போலும்?

அவர் காலால் காலனையுதைத்தவர்; அரியயனுகியமரர் பயந்தோடி வந்து அடைக்கலம் புகுத ஆலகால முண்டவர்; நாசிங்கம் தருக்குற்று தேவரையலைக்க வீரபத்திரராகிய சரபப் பக்ஷியைக் கொண்டு தண்டித்தவர்; தக்க யாகத்தை யழிப்பித்தவர்; வயிரவரால் பிரமன் தலையைக் கிள்ளுவித்தவர்; பகை கொண்டவரைத் தண்டித்த சரிதைகள் ஒரு கோடி யுள்ளன, சிவபெருமானைப் புகலிடமாகக் கொண்டவர் உய்வர்; அல்லாத பேதையர் அழிவர். அப்பரம பதியின் புதல்வரோடு நீர்போர் செய்யின் உய்வீரோ? முன்னாளில் விண்ணும் மண்ணும் மலையும் அலைகடலும் மாறுபாடுற்றனவே? அது முருகவேள் செய்த திருவிளையாடலால் விளைந்ததே என்று பலர் கூறினர்கள். குமாரக்கடவுள் ஒரு குழவி வடிவாக விளையாட, அவரை யறியாது தேவர் போர் செய்ய, அவர்களைக் கொன்று எழுப்பினர் என்பர். அப்போது, அண்டங்களும், எல்லா உலகங்களும், தேவரும் மூவரும் யாவரும் தனது திருமேனியிற் காணுமாறு ஒரு பாரமேசுர வடிவத்தைக் காட்டினர் என்பர். பிரமனைச் சிறையிட்டவர். இனி பூமியை அகழும் விட்டுணுவாகிய பன்றியின் கோட்டை ஒரு கையாற் பற்றி வானுலகிற் சுற்றி அக்கொம்பை ஒடித்து, தனது பிதாவிடம் முருகவேள் தருவர் என்பர். முருகவேள் எல்லாஞ் செய்ய வல்லவர்; யாரினும் வலியர்; திருமாலினுடைய சக்கரத்தைப் பதக்கமாகத் தரித்த தாரகனையும் கிரவுஞ்ச மலையையும் அழித்ததே அதற்குச் சாட்சியாகும். அவரைச் சிறுவனென்று இகழாதே.

வாசவன் குறையு மந்தண் மறையவன் குறையு மற்றைக்
கேசவன் குறையு நீக்கிக் கேடிலா வெறுக்கை நல்க
ஆசிலோர் குழவி போலா யறுமுகங் கொண்டா னெம்போ்
ஈசனே யென்பதல்லால் பிறிதொன்றை யிசைக்கலாமோ.

பிரமாதி தேவர்கள் அறியப்படாத சோதி சொரூபராகிய அக் கடவுளைக் காங்கேயரென்றும், கார்த்திகேயரென்றும், மான் மருகரென்றும், தேவசேனாபதி யென்றும் இப்படி பல நாமங்களைச் சொல்லியழைப்பது அறியாமை யன்றோ?

கங்கைதன் புதல்வ னென்றும் கார்த்திகை மைந்த னென்றும்
செங்கண்மான் மருக னென்றும் சேனையின் செல்வ னென்றும்
பங்கயன் முதலோர் தேறப் பரஞ்சுடர் முதல்வன் றன்னை
இங்கிவை பலவுஞ் சொல்லல் ஏழைமைப் பாலதன்றே.

தந்தையே! வீரவாகு என்ற ஒருவனாலேயே இந் நகரும் அவுணரும் அழிவரென்றால் குமாரக் கடவுளால் அழியுமென்று சொல்லவும் வேண்டுமோ? முருகப் பெருமான் போர் செய்ய வருவரேல், நமது வரங்களும், படைகளும், மாயங்களும், கொற்றமும், வெற்றியும் ஒருங்கே அழியும். ஆதலால் இப்பொழுதே தேவர்களைச் சிறைவிடுத்து, கந்தவேள் கழலிணையைப் பணிந்தால் அவர் நமது குற்றத்தைப் பொறுத்து, தாமும் அளவற்ற வரங்களைத் தந்து காத்தருள்வர். இதுவே செய்யத் தக்கது!" என்று இரணியன் கூறினன்.

இரணியனுடைய அறவுரையைக் கேட்ட சூரபன்மன் ஆலகாலம்போல் கொதித்து, "ஏ அறிவிலியே! இந்த வார்த்தையை உனக்குச் சொல்லி வைத்தவன் யாவன்? அவனை இப்பொழுதே கொல்வேன். பிரமன் என்னிடம் பஞ்சாங்கம் சொல்லுகின்றான்; திருமால் என் தம்பிக்குத் தோற்றோடினன். இந்திரனும் இமையவரும் மீன் பிடிப்பர். இத்தகைய தனியாசாகிய என்னை யாரால் என்ன செய்ய முடியும்? சிவபெருமானே எதிர்வரினும் வெல்ல வல்லேன். அசுரகுல உயர்வை அறவே நீங்கினாய்; பகைவர்க்குப் பயந்தனை. இனி இவ்வார்த்தையை இன்னொரு முறை சொல்லுதியேல் உன்னை இயம புரத்திற்கு அனுப்புவேன்" என்று வெகுண்டுரைத்தான். இரணியன் கேட்டு, "இவனுக்கு அழிவு காலம் வந்துவிட்டது. இவன் இறக்குமுன் நாம் இறப்பது நலம்" என்று எண்ணி, பிதாவை வணங்கி, "அப்பா! என் குற்றத்தைப் பொறுத்தருளும். நான் போருக்குப் போவேன்; விடை தாரும்" என்றான். சூரபன்மன் அவனைத் தழுவி மகிழ்ந்து விடை தந்தனுப்பினன்.

இரணியன் போர்க்கோலம் புனைந்து தேரேறிச் சென்றான். ஆயிரந் தோழர்களும், ஆயிரம் சேனாபதிகளும், நாலாயிரம் வெள்ளம் சேனைகளும் உடன் சென்றன. பேரிகை யறைந்தார்கள்.

இரணியன் போர்க்களஞ் சேர்ந்தான். பூதரும் அவுணரும் கலந்து பொருதார்கள். அவுண சேனையிற் பலர் மாண்டனர்; பூதரிலும் சிலர் மாண்டனர். நாரதர் வீரவாகு தேவரிடம் வந்து "இவன் சூரபன்மன் மகன்; பெரிய மாயாவி; இவனை உம்மை யன்றி வெல்வாரில்லை" என்று கூறினர். வீரவாகு தேவர் வெகுண்டு பாண மழை பொழிந்து கொடிய அசுர சேனையை அழித்தார். அறஞ் செய்யாதான் ஆக்கம் போல அவுணப்படை யழிந்தது. அதனைக் கண்ட இரணியன் ஆயிரஞ் சிங்கங்கள் பூண்ட தேரில் வந்தான். பூதப்படைத் தலைவர்களுள் நீலர் என்பவர் இரணியனை எதிர்த்தார். இரணியன் ஒரு வேற்படையை நீலர் மார்பில் மூழ்கும்படி விடுத்தான். நீலர் இளைக்காமல் அவன் தேரை ஒரு மரத்தால் அழித்தார். இரணியன் வேறு தேரேறி கணைமழைசிந்தி அவருடம்பைத் தொளைத்தான். நீலர் பல மலைகளை வீசினர்; இரணியன் அவற்றை யழிக்க, நீலர் கோபித்து இரணியனைத் தேரோடு எடுத்து விண்ணில் எறிந்தார். இரணியன் விண்ணுலகிற் சென்று மீண்டுவந்தான். வந்தவனை நீலர் உதைத்து உருட்டி மிதித்தார். அவன் மார்பு பிளந்தது. இரணியன் பயந்து மாயா மந்திரத்தை உச்சரித்தான். இரணியனைப் போல் ஒரு உருவம் உண்டாயிற்று. அதனுடன் நீலர் பொருதார். அவ்வுரு விண்ணிற் செல்லும்; மண்ணில் வரும்; சேய்மையதாகும்; அண்மையதாகும்; முன்னே வரும்; பின்னே வரும்; பலவுருவாகும். நீலர் சற்று திகைத்தார். இரணியன் அயர்வு நீங்கி எழுந்து கனற்கணையால் அவருடம்பைத் தொளைத்தனன். நீலர் திகைத்து நின்றார்.

இரணியன் மாயத்தைக் கண்ட வீரவாகுதேவர் சினந்து, முருகப் பெருமானைத் தியானித்து, ஞானப்படையை விடுத்து இரணியன் மாயையை யழித்தார். இரணியன் ஆயிரங்கணைகளை அவர்மீது செலுத்தினன் அக்கணைகள் அவர் மார்பிற் பட்டு துகளாயின. வீரவாகு தேவர் இரணியனுடைய கொடியையும், தேரையும், வில்லையும், கவசத்தையும் முடியையும், சேமத்தேர்களையும் அறுத்துத் தள்ளினர். இரணியன் "இனி யான் உய்யேன்;

உ

ஓம் குஹாய நம :

கற்பு.

(214- வது பக்கத் தொடர்ச்சி)

வானத்தில் நிலவு மிகவும் காந்தியாக விளங்கிற்று; அதனைச் சுற்றி உடுக்குலங்கள் மிளிர்ந்தன. தென்றல் வீசிக்கொண்டு இன்பத்தை விளைவித்தது. மேல் மாடியில் சந்திர வாணர் சாய்வு நாற்காலியில் வானத்தை நோக்கிய வண்ணமாகச் சாய்ந்திருந்தார். அத்தருணததில் அருந்ததி போன்ற கற்பின் மிக்க அவர் மனைவி தங்கக் கிண்ணத்தில் பால் கொண்டுவந்தாள். கணவன் முகம் வாடியிருக்கக் கண்டாள். பாலை ஒரு புறம் வைத்து "ஆருயிர்க்காதலரே! உமது முகம் வாடி யிருப்பதற்குக் காரணம் யாது? என்னிடம் சொல்லக் கூடியதாயின் சொல்லும்" என்று பாலினு மினிமையாகப் பரிந்து வினவினள். சந்திரவாணர்

என் பிதாவும் ஏனையோரும் அழிவது திண்ணம். எல்லோரு மழியின் என்பிதாவிற்கு திக்கடனும் நீர்க்கடனும் கழிப்பவர் யாவர்? புதல்வரைப் பெறுவது அதன் பொருட் டன்றோ? யான் மறைந்து உயிர்தப்பினால் எனக்கு வசையுறும்; மறையாது போரில் இறந்தால் என் பிதாவுக்கு நீர்க்கடன் செய்வாரில்லை என்று வசையுறும்; பிதா வசையடைவதினும் நான் வசையுறுவதே மேல் என்று எண்ணி மறைந்து கடலினில் மீனுருக்கொண்டான். அப்பொழுது கதிரவனுதித்தான்.

வீரவாகுதேவர் அது கண்டு வெற்றிச் சங்கை ஊதினர். தூதர்கள் ஓடி நிகழ்ந்தவற்றை சூரபன்மனிடம் கூறினார்கள். சூரபன்மன் வெள்கி இருந்தான். அத்தருணம் அவன் மைந்தனாகிய அக்கினி முகன் அவனிடம் அடைந்தான்.

(தொடரும்)

'பெண்ணரசே! இறைவன் நமக்கு அளவற்ற செல்வத்தைக் கொடுத்திருக்கின்ருர். பணம் இருந்து பயன் என்ன?

மக்கள் மெய்தீண்ட லுடற்கின்பம் மற்றவர்
சொற் கேட்ட லின்பஞ் செவிக்கு.

என்ற புனித மொழிப்படி, வாழ்க்கையை வளம்படுத்தும் ஓர் மகவு பிறக்கவில்லையே என்ற கவலை என் உள்ளத்தை வாட்டுகின்றது; இதைத் தவிர வேறு வாட்டம் இல்லை'' என்ருர். மட்டுவார் குழலி அதனைக் கேட்டு, "நாத! கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகவேளேயாம். 'அடியவ ரிச்சையில் எவை எவையுற்றன அவை தருவித் தருளும் பெருமாளே' என்ருர் அருணை முனிவரும். ஆதலால் செந்திலம்பதி போய் கந்த சஷ்டி நோன்பு நோற்ருல் எம்பெருமான் அருள்புரிவார்'' என்று கூறினுள். சந்திரவாணர் மனைவியின் நல்லுரைக் கிணங்கி, ஐப்பசி மாதம் கந்த சஷ்டியின்போது திருச்செந்தூர் சேர்ந்தார். மனைவியுந் தானும் வதனாரம்ப தீர்த்தத்திலும், நாழிக் கிணற்றிலும் நீராடி, திருக்கோயிலுட் சென்று எம்பெருமானைக் கண்குளிரக் கண்டு, ஆனந்தக் கண்ணீர் பொழிந்து,

பரிமள களபசு கந்தச் சந்தத் தனமானுர்
    படையம படையென அந்திக் குங்கட் கடையாலே
வரியளி நிரைமுரல் கொங்குக் கங்குற் குழலாலே
    மறுகிடு மருளனை யின்புற் றன்புற் றருள்வாயே
அரிதிரு மருகக டம்பத் தொங்கற் றிருமார்பா
    அலைதமு குமுவென வெம்பக் கண்டித் தெறிவேலா
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் குருநாதா
    ஜெயஜெய ஹரஹர செந்திற் கந்தப் பெருமாளே.

என்று மனங்கசிந்து பாடி வழிபட்டு, 6 நாள்களும் பட்டினி கிடந்து நோன்பிருந்து 7-ம் நாள் அடியார்க்கும் ஏழைகட்கும் அன்னம் வழங்கி, பாரணை செய்து விரதத்தை முடித்துவிட்டு,

செந்திலாண்டவனிடம் விடை பெற்றுக்கொண்டு தங்கள் சொந்த ஊராகிய அளகாபுரி சேர்ந்து இல்லறம் நடாத்தி வருவாராயினார்.

அந்த அளகாபுரியை யரசுபுரியும் மங்களேஸ்வர மன்னனுக்கு ஓர் மகவு பிறந்தது. ஊரெல்லாம் கொண்டாட்டமாக இருந்தது. அரசன் தன் குழந்தைக்கு அளவற்ற ஆபரணம் அணிவித்தான். 3 மாதத்தில் அக்குழந்தை கள்ளர்களால் களவாடப்பட்டது. மன்னன் மிகவும் மனம் வருந்தி மணியை யிழந்த பணியரசன்போல் பதைபதைத்தான். அச்செய்தியைக் கேட்ட சந்திரவாணரும் மனம் வருந்தினார்.

செந்திற் கந்தப்பெருமான் திருவருளால் மட்டுவார் குழலி கருக்கொண்டனள். உற்றாரும் மற்றாருங் களிப்புற்றனர். வளர் பிறை மதிபோல் கருவளர்ந்து, முன்னாள் செய்த தவப்பயனால் ஓர் நன்னாளில் ஓர் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். பாற் கடலில் பிறந்த பங்கயவல்லி போல் குழந்தை பொலிவுடன் விளங்கியது. குழந்தைக்கு "செந்தில் வடிவு" என்று பேரிட்டனர். குழந்தை தாய் களிக்கத் தமர் களிக்கத் தந்தை களிக்க இனிது வளர்ந்தது. மொழி பயின்ற நாள் தொடங்கி "முருகா முருகா" என்று கூறும். ஐந்தாவது ஆண்டில் பள்ளியில் வைத்தனர். "தவத்தளவே யாகுமாந் தான் பெற்ற செல்வம்" என்ற முதுமொழிப்படி செந்தில் வடிவு நன்றாகக் கலைபயின்று வந்தனள். அவளுடன் சாமுண்டி என்ற ஒரு பெண்ணும் படித்து வந்தனள். சாமுண்டி பொறாமை யுடையவள்; காரண மின்றியே எல்லோருடனும் பகை செய்வள். செந்தில் வடிவு ஆண்டு தோறும் மேல் வகுப்புக்கு உயர்ந்து வந்தனள். கல்விப் பரிசு, விளையாட்டுப் பரிசு முதலிய பரிசுகள் முழுவதும் செந்தில் வடிவுக்குத்தான் கிடைக்கும். அந்தப் பள்ளிக்கூடத்தில் இவள் முதல்தர மாணவியாக விளங்கினாள். இதற்கு நேர் மாறாக சாமுண்டி இருந்தாள். அவள் ஒரு வகுப்பில் 4 அல்லது 5 ஆண்டுகள்வரை மிகப் பொறுமையாக இருப்பாள். அவளுக்குப் படிப்பு என்றால் பாம்பைக் கண்ட மாதிரி; உபாத்தியாயரைக் கண்டால் புலியைக் கண்டாற் போல்; சாமுண்டியின் வீட்டில் அவளை நாள் தோறும் "செந்தில்

வடிவும் உன்னைப்போல் பெண்தானே? அவள் வருஷந்தோறும் மேல் வகுப்புக்கு உயர்ந்து வருகின்றாள்; நீ வெறும் மக்குப் பிண்டமாக இருக்கின்றனையே; அவள் காலைக் கழுவிக்குடி; புத்தி வரும்" என்று ஏவுவார்கள். இதனால் சாமுண்டிக்கு செந்தில் வடிவினிடம் அளவற்ற அழுக்காறு உண்டாயிற்று. "இந்தப் பாழும் பெண் இருக்கின்றவரை நமக்கு திட்டு வந்துகொண்டே யிருக்கும். இவளைத் தொலைத்து விட்டால் நமக்கு சள்ளை யின்றியிருக்கும்" என்று எண்ணினாள். அவ்வெண்ணம் முதிர் வுற்றது. சாமுண்டி ஒரு நாள் பள்ளியிலிருந்து திரும்பும்போது செந்தில் வடிவைப் பார்த்து, "பிரியே! நீ ஆமையைப் பார்த்திருக் கிறாயா?" என்றாள். செந்தில் வடிவு "சாமுண்டி! நான் நேரில் பார்த்ததில்லை. அப்பர் சுவாமி தேவாரத்தில் "திளைத்து நின் றாடுகின்ற ஆமைபோல் தெளிகிலாதேன்" என்று படித்திருக் கின்றேன்" என்றாள். சாமுண்டி "அம்மா! அங்கே ஒரு கிணற் றில் ஒரு பெரிய ஆமை இருக்கின்றது; காட்டுகின்றேன்; வா" என்று அழைத்தாள். கள்ளங்கமற்றவளாகிய செந்தில் வடிவு சாமுண்டியின் வஞ்சனையை யறியாது அவளுடன் சென்றாள். சாமுண்டி ஊர்ப்புறத்திலுள்ள ஒரு கிணற்றினிடம் அவளை அழைத்துக் கொண்டுபோய், "இதோபார்; ஆமை எவ்வளவு அழகாகத் தண்ணீரில் விளையாடுகின்றது" என்று காட்டினாள். செந்தில் வடிவு குனிந்து பார்த்தாள். உடனே அக்கொடியவள் காலைவாரி கிணற்றில் செந்தில் வடிவைத் தள்ளிவிட்டு, "இன்றோடு எனக்கு வசவு தொலைந்தது" என்று ஓடி தன் வீடு சேர்ந்து மகிழ்ச்சியுடனிருந்தாள்.

செந்தில்வடிவு "முருகா! முருகா!! முருகா!!!" என்று கிணற்றில் வீழ்ந்தாள். தண்ணீருக்குள் திக்குமுக்காடினாள். முருகவேள் திருவருளால், ஏழைச்சிறுவனும், பிறர் துய ரைத் தன் துயராகக் கருதுபவனும், நற்குண நல்லொழுக்க முடையவனுமாகிய சிவகுமாரன் அங்கு அக்கிணற்றில் தண் ணீர் குடிக்கும் பொருட்டுவந்து கிணற்றில் இறங்கினான். தண் ணீரில் தத்தளிக்கும் தையலாசைக் கண்டான். விரைந்து

குதித்து அவளுடைய வலக்கரத்தைப் பிடித்துத் தூக்கிக் கரை சேர்த்து உபசரித்தான். செந்தில்வடிவு அவனைக் கண்டு "முருகக் கடவுளே உருவெடுத்து வந்தாரோ" என்று ஐயுற்றாள். "சமய சஞ்சீவிபோல் வந்து என்னையாண்ட சற்குண சீலரே! நீங்கள் யார்? உங்கள் திருப்பெயர் யாது? இங்கு ஏன் வந்தீர்?" என்று வினவினாள். சிவகுமாரன், "பெண்மணியே! நான் இவ்வூரில் வாழ்பவன்தான். என் பெயர் சிவகுமாரன். இங்கு தண்ணீர் பருக வந்தேன். நீ யார்? இக்கிணற்றில் உன்னைத் தள்ளியவர் யார்? தயவு செய்து சொல்" என்று வினவினான். "ஐயா! நான் சந்திரவாணருடைய மகள்; என் பெயர் செந்தில் வடிவு; ("சாமுண்டி நம்மைக் கிணற்றில் தள்ளினாள் என்று வெளியானால் அவளை எல்லோரும் பழிப்பார்கள் அடித்தாலும் அடிக்கக்கூடும். "வாய்மை யெனப்படுவ தியாதெனில் யாதொன்றுந் தீமையிலாத சொலல்" என்று படித்திருக்கின்றோம். இங்கே ஒரு பொய் சொல்லி அவளுக்குத் தீங்கு வராவண்ணம் காப்பாற்ற வேண்டும்" என்று தனக்குள் எண்ணி) நான் தண்ணீர் குடிக்க இதில் இறங்கினேன்; படி வழுக்கி விழுந்துவிட்டேன். என்னை ஒருவரும் தள்ளவில்லை" என்றாள். சிவகுமாரன் "இனி கிணற்றினிடம் நெருங்காதே; வீட்டிற்குப் போ" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். செந்தில்வடிவு அவனை உற்று நோக்கி அவன் மறைந்தபின் "என்ன அன்பு? எவ்வளவு பெரிய உதவி?

> செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
> வானகமும் மாற்ற லரிது.

என்ற பொய்யா மொழிக்கிணங்க இவருக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய வல்லேம்? அறிவும், அன்பும், ஆன்ற ஒழுக்கமும், வீரமும், பரோபகாரமும் உடைய இவரை மீண்டுங் காண்கின்ற நாள் என்றோ?" என்று ஏங்கி உடைகளை உலர்த்தி யுடுத்துக் கொண்டு வீடு சேர்ந்தாள். தாயார் மகளைக் கண்டு "கண்ணே! இன்றைக்கு ஏன் இவ்வளவு நேரம் கழித்து வந்தாய்? உடம்பு வாடி யிருக்கிறதே; காரணம் என்னை? உன் முகத்தில் ஒரு

மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே! என்ன நடந்தது?" என்று கேட்டாள். செந்தில்வடிவு "அம்மா! ஒன்றுமில்லை. பள்ளிக்கூடம் விட்ட பிறகு தண்ணீரைப் பற்றியும், ஆமையைப் பற்றியும் சிறிது நேரம் படித்துவிட்டு வந்தேன்" என்றாள். அன்னை அன்னம் ஊட்ட உண்டாள்.

அன்று முதல் அவள் மனக்கோயிலில் சிவகுமாரன் குடி புகுந்தான். சிவகுமாரனைப் பற்றி அவள் நினையாத நேரமில்லை. அவனுடைய அன்பு மொழி அவள் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. ஒருநாள் பள்ளியை விட்டு வீட்டுக்கு வரும்போது சாமுண்டி எதிர்ப்பட்டாள். செந்தில் வடிவைக் கண்டு திகைத்து நின்றாள். செந்தில் வடிவு அவளைத் தழுவி "நீ அஞ்சாதே! நீ எனக்கு ஒரு தவறும் செய்ய வில்லை. உன்னால் எனக்கு நன்மையே விளைந்தது" என்று இன்னுரை கூறிச் சென்றாள். சாமுண்டி "அந்தோ! கிணற்றில் தள்ளியும் இவள் எப்படியோ பிழைத்துக் கொண்டாளே? இவள் தொலையுநாள் என்றோ" என்று ஏங்கினாள். மாதாந்தர வெள்ளிக்கிழமை மாலை செந்தில் வடிவு திருநீறும் குங்குமமுமணிந்து கிண்ணத்தில் நெய்யை யெடுத்துக்கொண்டு முருகவேள் கோயிலுக்குப் போய் விளக்கேற்றி வைத்துப் பெருமானை வணங்கினாள். அங்கு கல்லுங் கரையுமாறு சிவகுமாரன் பாடிக்கொண்டு நிற்பதைக் கண்டாள். அவளுடைய அன்பு வெள்ளம் பொங்கியது. அவன் பாடியபின் வீட்டுக்குத் திரும்பும் வரை நின்றிருந்து, வெளியே வந்தபின் கும்பிட்டு, "அன்ப! எங்கள் வீட்டிற்கு ஒரு முறை நீங்கள் வரக்கூடுமா?"! என்று தேன் கனியக் கேட்டாள். சிவகுமாரன், "செந்தில்வடிவு! நான் மிகவும் எளியவன்; நின் தந்தை பெரிய சீமான். நான் வரத் தகுதி யற்றவன். ஆதலால், நின் வீட்டிற்கு நான் வருவது முறையன்று." என்றான். செந்தில் வடிவு, "ஆர்வலரே! பணம் இல்லையானால் ஒருவன் தகுதியற்றவனாக முடியாது. குணந்தான் சிறந்தது. உமக்குக் கோடி வந்தனம். ஒரு நாளைக்கு வாரும்" என்றாள். அவளுடைய அன்புக்கு மகிழ்ந்த சிவகுமாரன் மறுநாள் மாலை சந்திரவாணர் வீட்டிற்குப் போனான். செந்தில்வடிவு அவனைக் கண்டவுடனே அமிர்தத்தைக் கண்ட நோயாளிபோல் உள்ளம் உவந்து ஓடி

ஓராசனந்தந்து, சிற்றுண்டிகளையும் பழங்களையும் பாலையுந் தந்து உபசரித்தாள். சிவகுமாரன் அவற்றில் சிறிதுண்டு, “செந்தில் வடிவு! நீ என்ன படிக்கின்றாய்?’ என்றான். “அன்ப! வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின் கற்றத னாலாய பயன் என் கொல்” என்ற திருமொழிக் கிணங்க படித்ததன் பயனை யடைய முயன்று கொண்டிருக்கின்றேன்” என்றாள். சிவகுமாரன் “செந்தில்! நான் பரம ஏழை; நீயோ குபேரன் மகள்; நான் இங்கு இருப்பதற்குப் பொருத்த மற்றவன்; விடை பெற்றுக் கொள்ளுகிறேன்” என்று புறப்பட்டுச் சென்றுவிட்டான். செந்தில்வடிவு அவனுடைய அறிவிலும் அன்பிலும் கட்டுண்டு கவன்றனள்.

சில நாள் கழிந்தன. செந்தில் வடிவுக்கு வயது 14 ஆயிற்று மங்கைப் பருவமுற்றனள். சந்திரவாணர் மகளைப் பள்ளியை விட்டு நிறுத்திவிட்டனர். செந்தில்வடிவுக்கும் சிவகுமாரனுடைய நினைவு மட்டும் மனதை விட்டு நீங்கவில்லை. அவள் அவனிடத்து வைத்திருந்த அன்பு காதலாக மாறியது. கிணற்றில் இறக்கப் போகுந் தருணத்தில் வலக்கை தொட்டு கரை யேற்றிய அவர் தாம் நமக்குக் கணவர்; அவரை யன்றி ஏனைய ஆடவர் அனைவரும் உடன் பிறந்தாரே; நமது உடல், உள்ளம், உயிர் யாவும் அவருடையவே; வள்ளி மணவாள! அன்று என்னைக் காத்த உத்தமனை எனக்குக் கொழுநனாகத் தந்தருள்” என்று எண்ணி இறைவனை வேண்டுவாள்.

ஒரு நாள் மாலை நேரம்; கதிரவன் தனது கிரணங்களை ஒடுக்கிக்கொண்டு மேற்கடலில் விழுகின்ற நேரம். பறவைகள் இனிது ஒலித்துக்கொண்டிருந்தன. செந்தில்வடிவு தனது பொன் மாளிகையின் பின்புறத்தில் உள்ள பூங்காவில் உலாவிக்கொண்டிருந்தாள். அவளுடைய தோற்றம் விண்ணிலிருந் திறங்கிய மின்னற் கொடிபோலிருந்தது. கண்ணுக் கடங்காத கட்டழகுடன் அக்காரிகை விளங்கினாள். அங்கொரு புதரிலிருந்த பாம்பு சீறி அவளைக் கடிக்க எழுந்தது. அதனைக்கண்ட ஆரணங்கு “முருகா! முருகா!! என்று ஓலமிட்டனள். வெகு தூரத்தில் போய்க்கொண்டிருந்த சிவகுமாரன் காதில் அக்குரல் விழுந்தது.

ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வந்தான். பாம்பைக் கொன்றான். அத்திருமடந்தையைக் கண்டு திகைத்து நின்றான். 3, 4 வருடங்கட்கு முன் பார்த்த இவள் இப்போது இலக்குமி தேவியைப் போல் இலகக் கண்டு உள்ளம் உடைந்தான். சில நிமிடங்கள் வரை அவனுடைய கண்கள் இமைக்குந் தொழிலை மறந்துவிட்டன. ஓவியம்போல் நின்ற அக்கட்டழகனைக் கண்ட அம்மாதரசி நாணித் தலை குனிந்தாள்; கடைக் கண்ணால் அவனுடைய எழிலமுதைப் பருகினாள். சிறிது நேரம் மௌனமே இருவரிடமுங் குடிகொண்டது. சிவகுமாரன் சிறிது தெளிந்து அவளிடத்திலிருந்து மிகுந்த முயற்சியோடு கண்களைத் திருப்பினான். ஆயினும் அவன் கண்கள் அன்று அவன் ஆணைமீறி அவளிடம் அடிக்கடி சென்றுகொண்டேயிருந்தன. தலை குனிந்து நின்ற செந்தில் வடிவு பேச வாயெடுத்தாள்; பேச்சுவரவில்லை. உதடுகள் துடித்தன. நெஞ்சில் ஒரு படபடப்பு உண்டாயிற்று. என்றுமில்லாத ஒரு உணர்ச்சி உள்ளத்தில் உண்டாயிற்று; இருவருக்குள் யார் முதலில் பேசுவது என்று விளங்கவில்லை. முடிவில் சிவகுமாரன், "ஆரணங்கே! இந்தப் பாம்பு நின்னைக் கடிக்க வந்ததோ?" என்றான். "ஆர்வலரே! அன்றும் என்னைக் காத்தருளினீர்; இன்றும் காத்தருளினீர்; இனி என்றும் என்னைக் காப்பது தங்கள் கடனே. இரண்டுமுறை உதவி செய்தீர். எனக்கு ஒரு வரந்தருவீரா?" என்றாள். சிவகுமாரன் "மானே! நானோ உன்னைக் காப்பாற்றினேன்? நம்மால் ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாது. எல்லோரையுங் காக்கவல்லவன் நங்கந்தக்கடவுளே! அவனே நமது சொந்தக் கடவுள்; எந்தக் கடவுளும் அந்தக் கடவுளின் ஆணை வழி நிற்பவரே; "சிகரி அண்டகூடஞ் சேருமழகார் பழநிவாழ் குமரனே பிரமதேவர் வரதா" என்றார் நம் அருணையடிகள். கலியுக வரதனாகிய அப்பரமபதியல்லவா வரங்கொடுக்க வல்லவன்; ஒன்றுக்கும் பற்றாத எளியனாகிய நான் உனக்கு வரங்கொடுக்க வல்லனோ?" என்றான்.

செந்தில் வடிவு, "உள்ளத்தில் குடிகொண்ட வள்ளலே! அன்று கிணற்றில் என் வலக்கரம் பிடித்துக் காப்பாற்றினீர்.

அதுபோல் பல்லோருமறிய அக்கினி சான்ருக என் வலக்கை பிடித்து நான் உமக்குத் தொண்டு செய்ய என்னை ஏற்றுக்கொள் வீர். நீர் ஏற்றுக்கொள்ளவில்லையேல் என் உடம்பினின்றும் உயிர் பிரிந்து............"அதற்கு மேல் சொல்ல வரவில்லை. கண்ணில் முத்து முத்தாய் நீர் சிந்தியது. சிவகுமாரன் மனம் உருகியது. "தெய்வமே! செங்கதிர் வேலா! இது என்ன விளைவு; எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே. பெண்ணென்ருல் வேம்பாக இருந்த எனக்கு இன்று இவளைக் கண்டவுடன் கரும்பாகிவிட்டதே; இவள் அன்பும் பண்பும் என்னைப் பிணித்து விட்டனவே; இவளோ நிதிபதிக்கு நிகரான சந்திரவாணருடைய செல்வப் புதல்வி. நானே நித்திய தரித்திரன். தாயும் தந்தையும் சுற்ற மும் எல்லாமின்றி அனாதையானவன். இவளுக்கும் எனக்கும் கடலுக்கும் மடுவுக்கும் பொருத்தங் காண்பது போலும். இவளோ என்னைக் கணவனாக உறுதி செய்துவிட்டாள்; நான் இவளை மறுத்தால் உயிரை விட்டுவிடுவாள்போல் தோன்றுகின்றது. வள்ளி மணவாளன் திருவருள்போல் நடக்கட்டும். நான் திரு மண மின்றியே ஆண்டவனுக்கும் ஏழைகட்டும் தொண்டு செய்தே காலத்தைக் கழிக்க வேண்டுமென்று விரதங்கொண்டிருந்த உறு தியை இவளுடைய அன்பு ஒரு கணத்தில் அழித்து விட்டதே. ஆட்டுவிப்பவனும் அவன்; ஆடுபவனும் அவன்; அவனையன்றி அணுவு மசையாது என்று" பற்பல எண்ணி நெட்டுயிர்த்தான். இதற்குள் செந்தில் வடிவினுடைய தம்பி அப்பூங்காவுக்கு வந் தான். சிவகுமாரன் உயிரை செந்தில் வடிவினிடம் ஒப்புவித்து விட்டு வெற்றுடம்புடன் நீங்கினான். செந்தில்வடிவு பொற் பதுமைபோல் நின்ருள். அவளுடைய தம்பியும் 7 ஆண்டு டையவனுமாகிய அலவாயரசு "அக்கா! அம்மா உன்னை அழைக் கின்ருர்கள்; வா. அந்த மாமா யார்? அவர் உன்னையே திரும் பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனார். ஏன் அழுகின் ருய்? அந்த மாமா அடித்தார்களா? சொல்லு" என்ருன். செந் தில் வடிவு மனதை திடப்படுத்திக்கொண்டு, தம்பியை எடுத்து அணைத்து, "தம்பி! இதோ பார் பாம்பு; இது என்னைக் கடிக்க

வந்தது; அந்த மாமா வந்து இதை அடித்து விட்டார். வா" என்று பொன் மாளிகை புகுந்து தாயிடம் சென்றாள்.

தாயார் "அம்மா! வா. பூந்தோட்டத்தில் இவ்வளவு நேரம் என்ன செய்தாய். விளக்கு வைத்தவுடனே கந்தரநுபூதி பாராயணஞ் செய்வாயே சீக்கிரம் செய்து விட்டு சாப்பிடு" என்றாள். அன்றிரவு நெடுநேரம் வரை செந்தில் வடிவுக்குத் தூக்கம் வரவில்லை.

நாள் சில நீங்கின. சந்திரவாணர் தனது மனைவியை நோக்கி "பெண்ணே! நமது குழந்தைக்குத் திருமணஞ் செய்ய வேண்டும். தக்க மணமகனைப் பார்க்கவேண்டும்" என்றார். இதனை ஒரு புறத்திருந்து கேட்ட செந்தில் வடிவு திடுக்கிட்டாள். "நமக்கு மணமகன் சிவகுமாரனையின்றி வேறில்லையே? இதனை எவ்வாறு நாமே கூறுவது?" என்று ஏங்கினாள். சந்திரவாணர் மணமகனைத் தேடுவாராயினர். அதனை யறிந்த செந்தில் வடிவு மனம் வருந்தினாள். ஊணுறக்கந் தவிர்த்தாள். அவள் முகத்தில் புன்னகைப் பொலிவு நீங்கியது. தரையில் படுத்து "முருகா! முருகா!" என்று புலம்புவாள். கைப் புத்தகத்திலும், தன்னுடைய சாமான்களிலும் "சிவகுமாரர்" என்று எழுதி வைப்பாள். தாயார் மகளுடைய நிலைமையைக் கண்டு, நோயுற்றாளென்று எண்ணி மருத்துவரை யழைத்துக் காட்டினாள். அவர் நாடியைச் சோதித்து "இது மனோ விபாதி" என்று கூறிச் சென்றார். தாய் மகளை நோக்கி "எங்கள் மாதவத்தாலுதித்த மாதரசே! உனக்கு என்ன ஊடம்பு? ஏன் சரியாகச் சாப்பிடுவதில்லை. உன்னுடைய யாழ் துருப்பிடித்து விட்டதே? மலர்ந்துள்ள நின் முகம் இரவுத் தாமரையானதற்கு என்ன காரணம்? சொல்லுதி" என்றாள். செந்தில் வடிவு, "அம்மா! ஒன்றுமில்லை. சிவகுமாரனை நினைந்து சிந்தை நொந்தேன்" என்றாள். தாய், "கண்ணே சிவகுமாரனும் செவ்வேட் பரமனை நீ பிறந்த நாள் தொடங்கி நினைக்கின்றனை; புதிதாக நினைக்க வில்லையே? அதற்காக உள்ளம் உலைவதேன்?" என்றாள். செந்தில் வடிவு ஒன்றும் பதில் கூறவில்லை.

ஒருநாள் செந்தில் வடிவு தன் கருத்தை உயிர்ப்பாங்கியிடம் உரைத்தாள். பாங்கி தாயிடம் கூறினாள். மட்டுவார் குழலி சிவகுமாரன் என்பவன் யாரென விசாரிக்கத் தொடங்கினாள். அத்தருணம் சாமுண்டி வந்தாள். தாய் அவளைக கேட்டாள். சாமுண்டி, "சிவகுமாரன் என்பவன் ஒரு அநாதைப் பயல்; திக்கற்ற மக்கன்; நித்திய தரித்திரன்; அங்கும் இங்கும் அலைபவன்; வீடுவாசலில்லாதவன்; ஊர்ப்புறத்தே ஒரு சிறு குடிசை கட்டிக் கொண்டு அதில் இருக்கின்றான்" என்றாள். மட்டுவார் குழலி கேட்டு மனம் வருந்தி மகளிடம் வந்து, "அம்மா! என் வார்த்தையைக் கேள். சிவகுமாரன் என்பவன் வறியவன். வெறி பிடித்தவன்போல் சுற்றுவானும். அவனை மறந்துவிடு செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்த செல்வச் சிறுமியாகிய நீ அவனை மணந்து துன்புறுவாய்; வேண்டா. அப்பா உனக்குத் தேடி வைக்குஞ் செல்வச் சீமானை மணந்துகொள்" என்றாள். செந்தில் வடிவு, "அம்மா! கற்பொழுக்கத்தின் தன்மை நீ நன்குணர்ந்திருக்கிறாய். நான் ஒரு நாள் கிணற்றில் வீழ்ந்துவிட்டேன். அவர் என் கை தொட்டு எடுத்துக் கரை சேர்ந்தார். அன்றே அவர் என் கணவனாகி விட்டார். அவர் தீண்டிய கரத்தை வேறு ஒருவன் தீண்டலாமோ? அவர் இந்த உடம்பைத் தீண்டும் பாக்கியம் இந்தப் பிறப்பில் எனக்கு இல்லையானால் என் உடம்பை நெருப்பு தீண்டும்படி நேரும்; இது உறுதி" என்றாள்.

மட்டுவார் குழலி மகளுடைய சிறந்த கற்பின் உறுதியைக் கண்டு வியந்து, மறுத்துரைக்க மாட்டாளாய் மகளுடைய மனக் கருத்தை மணாளனிடம் கூறினாள். சந்திரவாணர் கேட்டு புற்றரவைப்போல் பொங்கினார். மகளிடம் வந்தார் "அம்மா! என்னே நின்மதி? கோடீஸ்வரன் மகளாகிய நீ கோவணாண்டியை மணந்து வாழ்வதா? அவனை மறந்துவிடு. உன்னை பெரிய சீமானுக்கு மணஞ் செய்து தருவேன். தாய் தந்தைகள் சொல்லைத் தட்டுவது பாவம். சிறு பிள்ளைத் தனமாகப் பேசாதே" என்றார். செந்தில் வடிவு, "அப்பா! உங்களுக்கு வணக்கம் பல. பெண் தருமத்தை உணராது உரைக்கின்றீர்; உள்ளத்தில் ஒருவ

னுக்குத்தான் இடமுண்டு. கர்ப்பக் கிரகத்தில் ஒரு தெய்வத்தைத்தான் பிரதிஷ்டை செய்ய வேண்டும். இரண்டு வைக்கப் படாது. அதுபோல் என்னைக் கிணற்றினின்றும் கரை யேற்றிய அன்றே அவர் என் உள்ளத்தில் இடங்கொண்டுவிட்டார். இனி அங்கு வேறு யாருக்கும் இடமில்லை. அடுத்த பிறப்பிலும் அவர் தான் என்னுடைய கணவர். என் உடலும் உணர்வும் உயிரும் அவருடையதே. ஞாயமல்லாத வகையில் தாய் தந்தைகள் சொல்லுவதைத் தட்டுவது பாவமன்று. எல்லா அறமும் உணர்ந்த தாங்கள் பெண்ணறத்தைச் சிதைக்க வேண்டாம். "சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்" என்றாரே குசேல முனிவர். பணத்தினும் குணமே சிறந்தது. அவருக்கு என்னைத் தர மறுத்தால் என் உடம்பில் உயிர் நிலை பெறாது" என்றாள்.

சந்திரவாணர் மனம் வெதும்பினார். மகளுடைய பிடிவாதத்தைக் கண்டு வெறுத்தார். "உன் தலையெழுத்தை அநுபவித்துத் தொலை" என்றார். ஒரு நாள் பார்த்து யாதொரு ஆடம்பரமுமின்றி சிவகுமாரனுக்கும் செந்தில் வடிவுக்கும் திருமணஞ் செய்வித்தார். நண்பருக்கும் சுற்றத்தாருக்கும் தெரிவிக்காமலேயே மணத்தை மிகச் சுருக்கமாக முடித்தார். காரணம் தன் தகுதிக்குப் பொருந்தாத ஏழை மணமகன் என்பதே. கல்யாணம் முடிந்த அன்று மாலையே செந்தில்வடிவு தன் தாய் தந்தைகளிடம் விடை பெற்று மணமகனுடன் சென்று சிறு குடிசை சேர்ந்தாள். சந்திரவாணர் மகள்மீது வெறுப்பினால் யாதொரு சீதனமுந் தரவில்லை. தாய் கணவன் கருத்திற் கிணங்கி இருக்க வேண்டி நேர்ந்தது. மகளுடைய நிலையைக் குறித்து கண்ணிருகுத்தாள்.

செந்தில் வடிவு கணவனுடைய சிறு குடிசையில் சுவர்க்க லோக வாழ்வுபோல் வாழ்வாளாயினள். நாள் தோறும் அதிகாலையில் எழுந்திருந்து நீராடி, மஞ்சள் திருநீறு குங்கும மணிந்து கணவனைத் தொழுவாள். தன் பவளக் கரத்தால் உணவு சமைத்து கணவனுக்கு ஊட்டுவாள். கணவன் உண்டு மிகுந்ததைத் தெய்வப் பிரசாதமாக வுண்டு மகிழ்வாள். கணவனுடைய

வேட்டிகளைத் தோய்த்து உலர்த்துவாள். தன் கையால் படுக்கை விரித்துக் கணவனைப் படுக்க வைத்துக் கால் வருடுவாள். கணவனுடைய சொல்லை மறைமொழியாகக் கருதுவாள். கணவன் அருகிலிருப்பதைக் கந்தவுலக வாழ்வாகக் கருதுவாள். அருந்ததியும் நாணுமாறு கணவனுக்கு வேண்டிய ஏவலைக் குறிப்பறிந்து செய்து இல்லறமாகிய நல்லறத்தை நடாத்தி வந்தாள். மட்டுவார் குழலி மகளுடைய வாழ்வின் தன்மையை யறிந்து வருமாறு பாங்கியை யனுப்பினாள். பாங்கி வந்தாள். அந்த வேளையில் சிவகுமாரன் நீராடப் போயிருந்தான். கற்பக நீழலில் வாழும் அயிராணியைப்போல் முகமலர்ந்து வாழும் செந்தில் வடிவைக் கண்டாள். வியப்புற்றாள்.

“அம்மா! அருந்தவச் செல்வி! நீ உன் தாய் வீட்டில் பல தாதிகள் பணி கேட்கச் சீமாட்டியாக இருந்தனையே? அறு சுவையுண்டியை பொற் கிண்ணத்திலிட்டு நின்தாயூட்ட மறு சிகை நீக்கி யுண்பாயே? இந்தக் குடிசையில் எவ்வாறு வாழ்கின்றாய்? உன் தந்தை சொற்படி செல்வவந்தனை மணந்திருந்தால் இந்தத் துன்பம் நேர்ந்திராதே, நின்னைப் பார்க்க என் மனம் பதைவிக்கின்றது” என்று பரிந்து கூறினாள்.

செந்தில் வடிவு, “பாங்கி! அறிவில்லாத அசட்டு வார்த்தையைக் கூறினாய். இந்தக் குடிசைதான் பொன் மாளிகை; என் கணவன் இந்திரன்; எனக்கு ஒரு குறையுமில்லை. கோடீஸ்வரராகிய பிதாவையும், தாயையும், தோழிகளையும் பிரிந்து சிறு குடிலில் வாழ்கின்றேன் என்று என்னை இகழ்ந்தனை; என் நன்மொழியைக் கேள்; என் பிதாவின் சொற்படி ஒரு பெரிய சீமானை மணந்து பெரிய மாளிகையில் நான் வாழ்வேனேயாமாகில், என் கணவனும் யானும் நெருங்கி யிருக்கும் பேறு கிடைத்திராது. இது சிறு குடிசையாயிருப்பதால் என் பதியினருகில் எப்போதும் நெருங்கியிருக்கும் பெரும் பேறு பெற்றேன். பணக்காரனை மணந்திருந்தால் என் கணவனுக்கு வேண்டியவற்றைப் பணியாளர்கள் செய்துவிடுவார்கள்; வறுமை யுடையவரை யான் மணந்து கொண்டதனால், கணவனுக்குரிய பணிவிடை முழு

வதும் யானே புரியும் பாக்கியங் கிடைத்தது. இதனால், என் வாழ்வு எத்துணைச் சிறந்ததென்பதைச் சற்று சிந்தித்துப் பார்'' என்றாள்.

எந்தை தந்தையைத்தாய் சகியர்சோ யிலேவிட்டோர் எளியர் சிற்றில்
சார்ந்தனனென் றிகழுமின்னே சிற்றில்லா லவர்க்கருகே தங்கப் பெற்றேன்
சேர்ந்தமிடி யாலவர்தம் பணியாவும் எனதுகையாற் செய்யப் பெற்றேன்
பாந்தவமீ தன்றியெந்தை யன்னையைவே றுக்குநிதி பாழ்த்த தன்றே.

பொருளடங்கிய இப்பாடலைக் கேட்ட பாங்கி மனம் உருகி, அவளைத் தழுவி, "கற்புக் கணிகலமே! நீயே புனிதவதி; நின் கீர்த்தி உலகில் பொன்றாது நின்று நிலவுமாக'' என்று வாழ்த்தி விட்டு, வீடுபோய் மட்டுவார் குழலியைப் பணிந்து செந்தில்வடிவு கூறிய பாடலைக் கூறினாள். தாய் கேட்டு உள்ளம் பூரித்தாள். கணவனிடம் இதனைக் கூற அவரும் மகளுடைய கற்புக்கு உள்ளம் உவந்தார். நாளை போய் மருகனையும் மகளையும் அழைத்து வர எண்ணியிருந்தார்.

அந்நகர மன்னனாகிய மங்களேஸ்வரன் களவாடிச் சென்ற தன் குழந்தையைக் கண்டுபிடிக்குமாறு முன் ஏவியிருந்த ஒற்றர்கள் வந்து, அரசனை வணங்கி, "மன்னரே! இவ்வூர்ப் புறத்தில் குடிசையில் வாழும் சிவகுமாரர் என்பவர்தான் தங்கள் குழந்தை'' நம் குழந்தையை களவு செய்த கள்வர் நகைகளைக் கழற்றிக் கொண்டு, அடுத்த ஊராகிய பள்ளப் பாளையத்தில் முருகன் என்ற குடியானவன் முற்றத்தில் கிடத்தியேக, அவன் குழந்தையை சிவகுமாரன் என்று பேரிட்டு வளர்த்தான். குழந்தையின் ஏழாவது ஆண்டில் வளர்ப்புத் தாய் தந்தையர் இறந்ததனால் சிவகுமாரர் போற்றுவாரின்றி வளர்ந்து ஊர்ப்புறத்தே குடிசையில் வாழ்கின்றார்'' என்று கூறினார்கள். அரசன் அன்றிரவு, "ஆறுமுகத்தரசே! என்மகன் இன்னானென்று உணர்த்தியருள்வீர்'' என்று குறையிரந்து படுத்தான். அவன் கனவில் முருகவேள் அடியார் கோலத்தோடு வந்து, "அப்பா! சிவகுமாரனே நின் மைந்தன்; ஐயுறுதே'' என்று அருளி மறைந்தார். மன்னன் கனவு தெளிந்து எழுந்து காலைக்கடன்களை முடித்து, சகல

விருதகளுடனும் சகல வரிசைகளுடனும் சென்று சிவகுமாரனை யும் செந்தில் வடிவையும் கட்டியணைத்து முத்தமிட்டு, "மகனே! சிவகுமாரா! மூன்று மாதக் குழந்தைப் பருவத்தில் என்னை விட்டு நீ பிரிந்தாய்; நகைக்காகக் கள்ளர் உன்னைக் களவாடிச் சென்றனர். அன்று தொடங்கி இன்று வரை பல ஒற்றரை விட்டு உன்னைத் தேடச் செய்தேன்; இன்றுதான் நீ என் மக னென்பதைத் திட்டமாக உணர்ந்தேன்; அரண்மனைக்கு வரு வாய்" என்று பட்டத்து யானையின்மேல் சிவகுமாரனையும் செந்தில்வடிவையும் ஏற்றி பதினெண்வித மேளங்களும் முழங்க அரண்மனைக்கு அழைத்துக் கொண்டேகினர். மறுநாள் காலை சிவகுமாரனுக்கு மகுடாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தது. சந்திரவதனரும் மட்டுவார் குழலியும் அவ்விழாவுக்குச் சென் றிருந்தார்கள். அரியணைமேல் மகளும் மருகனும் இருக்கக் கண்டு திகைப்புற்றார்கள். ஓடி இருவரையுந் தழுவினார்கள். விஷயம் இன்னதென்று உணர்ந்தார்கள். அரசர் பெருமானுக்குத் தன் மகள் மனைவியாகத் திகழ்வதைக் கண்டு செந்தில் வாழுங் கந்த வேளைப் போற்றினார்கள்.

அன்றிரவு ஏழாவது மாடிமேல், சந்திரகாந்தி மேடையில் சிவகுமாரனும் செந்தில் வடிவும் தனித்து உல்லாசமாக பூம்பந்த லின் கீழ் மெல்லணைமேல் இருந்தனர். செந்தில் வடிவு தன் கணவனுக்குற்ற எதிர்பாராத பெருமிதத்தை எண்ணி மகிழ்ந் தாள். சிவகுமாரன், தன் காதற் கிளியை நோக்கி, "கற்பரசே! வேறுமிடியனாயிருந்த என்னை இந்திரனென்று நீ எண்ணி மணந் தாய். நின் தூய எண்ணம் என்னை மண்ணுலக இந்திரனாக்கி விட்டது. கற்புடைப் பெண்கள் எண்ணிய எண்ணம் இம்மை யிலேயே சத்தியமாகும் என்பதை நின்னிடங் கண்டேன்; கற் புடை மனைவியொருவனுக் கிருந்தால் அவனே பரமபாக்கிய சாலி" என்று, தன் உயிர்த் துணைவியைத் தழுவினான். அவர் களுக்கு வெற்றி கூறுவதுபோல் "கொக்கறு கோ" என்று கோழி கூவிற்று.

முற்றும்.

உ

ஓம் குஹாய நம:

சீகாளத்தி

யாதவ மஹாராஜன் கதை

(சீகாளத்தி ஆலயங் கட்டப்பட்ட வரலாறு)

உயர்திரு இராவ் சாஹிப் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, M. A.
சென்னை.

(216-வது பக்கத் தொடர்ச்சி)

பயத்தினால் உடல் வியர்ப்ப, மெய்ந்நடுங்க, உள்நடுங்க, கண்ணீர் பெருக வெகு வேகமாய்ச் சென்று அரசன் முன்னிலையில் நின்றாள். நின்றதும் அரசர் ஸ்ரீமான் இவளை நெருப்பெழ விழித்து நோக்கி அருகில் நின்ற ஏவலாளர்களைப் பார்த்து "இவளது மலர் முடித்த கூந்தலை உடனே களைந்தெறிக" எனக் கட்டளை யிட்டான். ஏவலாளர்களும் நாவிதனைக் கொண்டு அவ்வாறே அவள் கூந்தலைக் களைவித்தார்கள். பாபம்! பீலி வீழ்த்திய மயில் போல நின்ற அவள் கண்ணீர் பெருக வாய்விட்டலறி அழுதுகொண்டே தன் வீட்டுக்குத் திரும்பினாள். தெருவில் இவளைக் கண்டார் யாவரும் இரங்கினர். "ஐயோ! பாபம்! உண்கலன்கள் தயாராக வைக்காத அற்ப குற்றத்துக்காகவா அரசன் இப்பெருந் தண்டனையை விதித்தான். உண்மையாகவே பெரிய குற்றஞ் செய்திருந்தால் எவ்வாறு தண்டனை ஏற்பட்டிருக்குமோ அறிகிலேம்" --- என்றார் ஒரு சிலர். உயர்ந்த ஆடை, சிறந்த ஆபரணங்கள், மணிவகைகள் இவையெலாங் கொண்டு ஒரு பெண்ணை நிரப்ப அலங்கரித்தாலும் கூந்தல் இல்லா விட்டால் அவளுக்கு அழகு குறைவு குறைவே' -- என்றார் ஒரு சிலர். 'அந்த நாவிதனுக்குத்தான் எப்படி கை வந்ததோ இவள் கூந்தலைக் களைய' என்றார் ஒரு சிலர். 'அரசன் உத்தரவு என்றால் வேறு பேச்சு என்ன இருக்கின்றது' என்றார் ஒரு சிலர். "அம்ம! அம்ம! நீங்கா வறுமையிற் பட்டாலும் படலாம்! ஒருவரிடம் சேவகம் செய்யாது உயிர் வாழ்தல்தான் நல்லது. என்னதான்

செல்வம் புரண்டு வருவதாய் இருந்தாலும் குற்றேவல் செய்து உயிர் வாழ்தல் உண்டே அது கொடிது கொடிது" —எனக் கூறினர் சிலர். இவ்வாறு தெருப்புறத்தில் இரு பக்கம் உள்ளவர்களும் பேசத் துக்கக் கடலில் ஆழ்ந்த அந் நங்கை நேராகத் தனது வீட்டுக்குப் போய் அங்குக் காத்திருந்த சங்கமேசர் திருவடியில் விழுந்து ஓவென்று கதறி யழுதாள். இங்ஙனம் வாய்விட்டுப் புலம்பும் நங்கையை நோக்கிச் சங்கமப் பெருமான் 'பெண்ணே! கவலைப் படாதே' என்று சொல்லித் தமது திருக்கரத்தை அவள் சென்னியின்மேல் வைத்தார். வைத்த அந்த நிமிஷமே உலகம் வியப்ப அவள் தலையில் கருங்கூந்தல் ஞெரேலென அடர்ந்து வளர்ந்து திகழ்ந்து பொலிந்தது. பாலைவனத்தில் மேகத்தைக் கண்ட மயில் போலவும், பலநாள் பசியால் வருந்தியிருந்தபோது திவ்ய உணவு கிடைக்கப் பெற்றவன் போலவும், புதையலைக் கண்ட வறிஞன் போலவும் அவள் அளவற்ற மகிழ்ச்சி பூண்டாள், ஐயன் திருவடியில் வீழ்ந்து வணங்கினாள். அவர் அனுமதியைப் பெற்று அரசன் முன்னிலையில் முகப்பொலிவுடன் வந்து நின்றாள். இவளைக் கண்ட அரசன் அவள் கூந்தலைக் களையும்படித் தான் இட்ட கட்டளையை ஏவலாளர்கள் நிறைவேற்ற வில்லை எனக் கருதிப் பெருங் கோபங் கொண்டான். அப்போது இவள் "அரசரேறே! உமது ஆணையை மீறி நடப்பார்களும் இவ்வுலகத்தில் உளரோ! அடிச்சியேன் முன்பு செய்த தவப்பேறாக எனது இல்லத்தில் ஒரு சிவனடியார் வந்துள்ளார். அப்பெருமான் என்பாற் கருணை கூர்ந்து தமது திருக்கரத்தை என் தலைமீது வைக்க இழந்த கூந்தலைப் பெற்றேன்! இதுவே உண்மை!' என்றனள். பத்தி நிறை சித்தத்தவனாகிய அரசன் இதைக் கேட்டதும் கோபம் மறைய விம்மிதம் உற்று-என்ன ஆச்சரியம் என எழுந்து பலர் சூழ விரைவில் அம் மாதரசியின் வீட்டுக்குச் சென்று அப் பெரியாரைத் தரிசித்து அவரது அற்புத உருவம் தன் உள்ளத்தைக் கவரச் சாஷ்டாங்கமாய் அவர் திருவடியில் விழுந்து பணிந்தான். பின் எழுந்து 'என்ன புண்ணியம் நான் செய்தனனோ தங்கள் திருவடியில் என் சென்னி உறுதற்கு எனப் பலவாறாகப் புகழ்ந்து 'அருட்குன்றமே! தாங்கள் எந்த நாடு? எந்த ஊர்? இங்கு வந்தது என்ன காரணம்?' உரைத்தருள வேண்டும்! எனக் கூறி வணக்கத்துடன் நின்றான்.

(தொடரும்)